**செய்தி வெளியீடு எண்: 430** **நாள் :** 07.08.2013

சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர்நலத்துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் இன்று (07.08.2013) காலை சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியினை ஆய்வு செய்தார்கள். இக்கல்லூரியில் முதலாண்டு மாணவர் சேர்க்கைக்கான நேர்காணலைத் தொடங்கி வைத்ததுடன், 10 மாணவ மாணவியர்களுக்கு முதலாமாண்டு சேர்க்கைக்கான ஆணையினை வழங்கினார்கள்.

மேலும், இக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவற்றை விரைந்து செய்து தருமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓவியப் பிரிவு மாணவர்களுக்கு மாதிரியாக அமர, ஓவியப் பிரிவைச் சார்ந்த 3 மாணவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களை குறுகிய நேரத்தில் ஓவியமாக வரைந்து அவரிடம் வழங்கினார்கள்.

இந்த ஆய்வின்போது, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்களும், கல்லூரி முதல்வர் (பொ) திரு.இரா.குணசேகரன் அவர்களும் உடன் இருந்தார்கள்.

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**